பொது
කාර්යාලය
General
024 205 1950
vnzeoplan@yahoo.com

இணையம்
වෙබ් අඩවිය
Web
www.vnzone.lk

தொலைநகல்
ෆැක්ස්
Fax
024 205 1911

**வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகம்**
**වවුනියාව උතුර කලාප අධ්‍යාපන කාර්යාලය**
**VAVUNIYA NORTH ZONAL EDUCATION OFFICE**

பணிப்பாளர்
අධ්‍යක්ෂක
Director
024 205 1910
0777 252 022
zdevnorth@gmail.cor

A9 வீதி, புளியங்குளம் | A9 මාර්ගය, පුලියංකුලම | A9 Road, Puliyankulam

எனது இல
මගේ අංකය
My No. NP/43/20/2/4/GA-04/Te/Ann.Tr-2023

தங்களது இல
ඔබේ අංකය
Your No.

திகதி
දිනය
Date 2022.06.02.

சகல அதிபர்களுக்கும்,

## ஆசிரியர் சேவையில் வருடாந்த இடமாற்றம் - 2023

மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களின் NP/20/ET/F/2/TB-03ஆம் இலக்க 2022.05.27ஆம் திகதிய கடிதத்திற்கமைய, இலங்கை ஆசிரியர் சேவையின் 2023 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகைமையுள்ளோர்

I. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைச் சேவைக்காலத்தினை நியமனம் பெற்ற வலயத்தில் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.

II. சேவையின் தேவை கருதி இடமாற்றம் வழங்கப்பட்டு சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தவர்கள்.

III. மருத்துவ காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றம் கோருவோர், அரச மருத்துவ நிபுணரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நோய் நிர்ணய அட்டை ஆகியவற்றுடன் விண்ணப்பித்தல் வேண்டும். குறித்த மருத்துவ காரணத்தின் அடிப்படையிலான இடமாற்றம் வழங்குவது தொடர்பில் இடமாற்றச்சபையின் தீர்மானத்திற்கமைவாக அல்லது அரசாங்க மருத்துவ சபையின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

IV. தமது சொந்த நலனுக்காக விஷேட காரணங்களின் அடிப்படையில் நிபந்தனை அடிப்படையிலான நியமனம் பெற்றவர்கள் தொடர்பில், அவர்களது நியமன நிபந்தனைச் சேவைக்காலத்துடன் நிபந்தனை இடமாற்றம் பெற்றதன் காரணமாக கடமையாற்ற வேண்டிய மேலதிக சேவைக்காலத்தினையும் சேர்த்துப் பூர்த்தி செய்த பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்

V. வாழ்க்கைத்துணையின் எஞ்சிய சேவைக்காலத்துக்காக கடமையாற்றுபவர்கள் தொடர்பில் அவர்களது நியமன நிபந்தனைச் சேவைக்காலத்துடன் வாழ்க்கைத்துணையின் எஞ்சிய சேவைக்காலத்தினையும் சேர்த்து பூர்த்தி செய்ததன் பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்.

VI. சம்பளத்துடனான கற்கை விடுமுறைகள் பெற்றவர்கள் அக் காலப் பகுதியினை நிரந்தர வலயத்தில் பூர்த்தி செய்த பின்னரே விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுகின்றனர்

அத்துடன் இடமாற்றம் கோரும் வலயத்தில் குறித்த பாடத்திற்கு உள்ள வெற்றிடம், கடமையாற்றும் வலயத்தினது ஆசிரியர் தேவை என்பனவற்றின் அடிப்படையிலேயே இடமாற்றம் வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும். அத்துடன் வடமாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை மற்றும் தேசிய இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் இடமாற்ற நடைமுறையின்போது கவனத்திற்கொள்ளப்படும்.

### 02. சேவைக் காலத்தினைக் கணிப்பிடுதல்

பின்வரும் சேவைக்காலங்கள் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **கட்டாய சேவைக்காலத்துடன் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.**

1 ஆசிரியரின் பயிற்சி மற்றும் கற்கை விடுமுறைக் காலம்/ விசேட விடுமுறைக் காலம்.

2 சொந்த மாவட்டத்தில் கடமையாற்றிய தற்காலிக இணைப்புக் காலம்

3 சொந்த மாவட்டத்தில் கடமையாற்றிய நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றக் காலம்/தற்காலிக இணைப்புக்காலம்

### 03. மாகாண இடமாற்றம்

வட மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் கோருவோர் தொடர்பில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைவாக தகுதி பெற்றோர் விடுவிக்கப்படுவார்கள்.

இடமாற்றங்கள் யாவும் 2023.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் ஆசிரியர்களின் சேவைக்காலம் 2022.12.31 ஆம் திகதி வரை கணிப்பிடப்படும்.

### 04. இடமாற்ற விண்ணப்பமும் ஏனைய நடைமுறைகளும்

1 விண்ணப்பங்கள் யாவும் முறையான விண்ணப்பப்படிவத்தில் **மூன்று பிரதிகளில்** சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண இடமாற்றம் கோருவோர் **நான்கு பிரதிகளில்** சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டு இருப்பதோடு காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். **இடமாற்றத்தின் போது பாடசாலைகள் வழங்குவது தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களது செயற்சாதனை அறிக்கை** (பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், கற்பித்தலில் தொடர்புபட்ட சித்தி வீதம் என்பன) அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

2 **யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் கோருவோர் தொடர்பில் அவர்கள் இடமாற்றம் கோரும் வலயத்தில் வெற்றிடமில்லாதவிடத்து வெற்றிடமுள்ள இன்னொரு வலயம் கவனத்திற் கொள்ளப்படும். எனவே, யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் கோருவோர் தமது விருப்பத் தெரிவாக குறைந்தது மூன்று கல்வி வலயங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். இடமாற்றம் கோரும் வலயத்தில் குறித்த பாட வகுதிக்கு வெற்றிடம் இருப்பின் மட்டுமே குறித்த வலயத்திற்குட்பட்ட பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படும்.**

3 இடமாற்ற விண்ணப்பத்துடன் முதல் நியமன கடிதப் பிரதி மற்றும் நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றம், தற்காலிக இணைப்பு என்பன பெற்றிருப்பின் அதன் பிரதிகள், செயற்சாதனை அறிக்கை, மற்றும் நடப்பாண்டின் நேரசூசி கட்டாயம் இணைக்கப்படல் வேண்டும்.

4 விண்ணப்பங்கள் யாவும் குறித்த நிரல் முறைகளினூடாக ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (**அதிபர் - கோ.க.ப - வ.க.ப - மா.க.ப**)

இவ் இடமாற்றத்திற்கு தகுதியுடையோர் தமது இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் **2022.06.30** ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட நிரலினூடாக (**அதிபர் - கோ.க.ப**) வலயக் கல்வி அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

- இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்களும்,
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதியான 2022.06.30 ஆம் திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும்,
- விண்ணப்பப்படிவத்தின் மூன்று பிரதிகள் மற்றும் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் (முதல் நியமனக்கடிதப்பிரதி மற்றும் தேவையானவை) இல்லாது அனுப்பப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**மேற்குறித்த காரணங்களினால் இடமாற்றம் நிராகரிக்கப்படின் அதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களே பொறுப்பாளியாவார்கள் என்பதனையும் தங்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.**

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் வலயக் கல்வி அலுவலகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருவதுடன் மேற்படி இடமாற்றம் தொடர்பாக தங்கள் பாடசாலையில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களுக்கும் அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா வடக்கு

வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்.
வவுனியா வடக்கு.

பிரதி:

1. செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம் - தயவுடன் தகவலுக்காக
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம் - தயவுடன் தகவலுக்காக
3. கோட்டக் கல்வி அதிகாரி – ஓமந்தை/நெடுங்கேணி – மேற்படி விதிமுறைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களினைப் பெற்று உரிய கால ஒழுங்கில் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்காக
4. பொதுக்கோவை